[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 28

மக்களுடைய உற்ற தோழியராக இருந்து, பேராசிரியர் தந்தை சிவராஜ் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடு கிறார்கள். (மேஜையைத் தட்டும் ஒலி) 1½ கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக, என்னுடைய இதயபூர்வமான நன்றியை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

3. கவன ஈர்ப்பு.

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் தொடர்ந்து மின்சாரம் தடைப்பட்டு வருவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்புகள் திரு. கே. செல்வராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, கோயம்புத்தூர் மாநகராட்சியில், தொடர்ந்து மின்சாரம் தடைபட்டு வருவது குறித்து, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான விவர அறிக்கை ஒன்று, அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிக்கை.

கோவை மாநகராட்சியில் எந்தப் பகுதியில் மின்சாரம் தடை படுகிறது என்று குறிப்பிடப்படவில்லை. இருந்தபோதிலும் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் மின்சாரம் தடை படுவதைத் தவிர்க்க 30 டிரான்ஸ்பார்மர்கள் பல்வேறு இடங்களில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இந்த நிதி ஆண்டில் (1991-92) 10 டிரான்ஸ்பார்மர்கள் நிறுவப்படும்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் அறிக்கையில், இந்த ஆண்டில்

10 டிரான்ஸ்பார்மர்கள் நிறுவப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது: அந்த டிரான்ஸ்பார்மர்கள் எந்தெந்தப் பகுதிகளில் நிறுவப்படும் என தெரிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தெந்தப் பகுதியிலே டிரான்ஸ்பார்மர்கள் நிறுவப்படும் என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே, எந்தெந்தப் பகுதியிலே மின்சாரம் தடைப்படுகிறது என்று சொல்லப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் இந்த அரசு, ஏற்கெனவே இதுபற்றி ஆராய்ந்து, நான் ஏற்கெனவே கோவைக்குச் சென்றிருந்த நேரத்திலேகூட, நம்முடைய தலைமை பொறியாளரையும், மாநகராட்சி ஆணையரையும் அழைத்து, இப்பிரச்சினை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட நேரத்திலே, விசாரித்து, கோவையிலே இருக்கிற மின் நிலைமையை சரி செய்ய வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, இன்றைக்கு அதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த வேலைகளின் முதல் முயற்சியாக இன்றைக்கு 30 டிரான்ஸ்பார்மர்கள் கோவைக்கு அனுமதிப்பதாக இருக்கிறது. அதிலே முதல்கட்டமாக 10 டிரான்ஸ்பார்மர்கள் போடப்பட இருக்கின்றன. ஆகவே, எந்தெந்தப் பகுதியிலே மின்சாரம் தடைபடுகின்றதோ, அங்கேயெல்லாம் அந்த டிரான்ஸ் பார்மர்கள் அமைக்கப்பட்டு, மின் விநியோகம் ஒழுங்குபடுத்தப் படும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகரசபையை, மாநகராட்சியாக மாற்றிய பிறகு, மாநகராட்சிப் பகுதிக்கு புதிதாக இணைக்கப் பட்ட பகுதிகள் இன்னும் தமிழ்நாடு மின்சார வாரியத்திடமே யுள்ளது. அந்த இடங்களை, மாநகராட்சி மின்சார இலாகாவால் நிர்வகிக்கப்பட முடியாமல் இருக்கிற சூழ்நிலையில், கோவை மாநகராட்சிக்கு இணைக்கப்பட்ட அந்தப் புதிய பகுதிகளை, தமிழ்நாடு மின்சார வாரியம், மாநகராட்சியினுடைய மின்சார இலாகாவுக்கு ஒதுக்கித் தந்தால், அங்கிருக்கிற குறைகளை, தெருவிளக்குப் பிரச்சினைகளை உடனுக்குடன் கவனிப்பதற்கு வசதியாக இருக்கும். ஆதலால், தமிழக மின்சார வாரியத்திட

மிருந்து, கோவை மாநகராட்சி மின்சார இலாகாவுக்கு, அந்தப் பகுதிகளை இணைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான பிரச்சினை அன்றைக்குக் கோவையிலே என்னிடம் சொல்லப்பட்டது. உடனடியாக 2,000 விளக்குகள் போட வேண்டுமென்று ஆணையாளரிடமும் தலைமைப் பொறியாளரிடமும் பேசி, கோவையின் புறநகர் பகுதிகளிலே அன்றைக்கே போட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அதற்கான வேலைகள் நடந்து முடிந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலே ஐந்து நகரங்கள் இன்றைக்கு நகராட்சியின் பொறுப்பிலே மின்சார நிர்வாகத்தைத் தமிழ்நாட்டிலே வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இது சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை நகராட்சி நிர்வாகமும், மின்சார வாரியமும் கலந்து பேசி, முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) விழுப்புரம் நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டம் தற்போது செயல்படாமல் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. தே. ஜனார்தனன் அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தே. ஜனார்தனன்.

***திரு. தே. ஜனார்தனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டம் தற்போது செயல்படாமல் இருப்பது குறித்து மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஒரு விவர அறிக்கை இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.